**கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், பொள்ளாச்சி**
முன்னிலை : திருமதி.P.சுபாஷினி, பி.ஏ., பி.எல்.,
**கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிபதி, பொள்ளாச்சி**

2022 ம் ஆண்டு ஏப்ரல் திங்கள் 11 ஆம் நாள் திங்கட்கிழமை
**ஐ.ஏ.எண்.02/2021 இன் அ.வ.எண்.180/2021**

மகாலிங்கம் ... மனுதாரர் / வாதி

/ எதிர் /

பழனிச்சாமி ... எதிர்மனுதாரர் / பிரதிவாதி

இம்மனுவானது கடந்த 22.03.2022 அன்று என் முன்பு இறுதி விசாரணைக்கு வந்தபோது மனுதாரர் தரப்பில் வழக்கறிஞர் திரு.P.K.மயில்சாமி, அவர்கள் ஆஜராகியும், எதிர்மனுதாரர் தரப்பில் வழக்கறிஞர் திரு.K.பாலசுப்பிரமணியம் அவர்கள் ஆஜராகியும் உள்ள நிலையில், இரு தரப்பிலும் எடுத்துரைக்கப்பட்ட வாதங்களின்படியும், ஆவணங்களின்படியும், இந்நீதிமன்றம் இன்று வழங்கிடும் கீழ்க்கண்ட....

**ஆணையுரை**

இம்மனுவானது, மனுதாரரின் அமைதியான சுவாதீனத்தில் உள்ள மனுச்சொத்தில் எதிர்மனுதாரர் அத்துமீறி உள் நுழைந்து இடையூறு செய்யாதிருக்க வேண்டி ஒரு இடைக்கால உறுத்துக்கட்டளை பரிகாரம் வழங்கி உத்தரவிடவேண்டியும், இம்மனுமீதான விசாரணை நிறைவுபெறும் நாள் வரை எதிர்மனுதாரருக்கு எதிராக ஒரு தற்காலிக உறுத்துக்கட்டளை பரிகாரம் வழங்கிட வேண்டியும் உரிமையியல் நடைமுறைச்சட்டம் கட்டளை 39 விதி 1 மற்றும் 2–ன் கீழ் தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

**2) மனுதாரரது மனு சங்கதியின் சுருக்கம் :**

இம்மனுவின் மனுதாரர் அசல் வழக்கில் வாதியாவார். மனுச்சொத்தானது ஆதியில் மனுதாரரின் தந்தையின் தந்தையான கைலாசப்பகவுண்டருக்கு பாத்தியப்பட்டு அவர் அனுபவித்து வந்த சொத்தாகும். மேற்படி

கைலாசப்பகவுண்டருக்கு பாத்தியப்பட்ட சொத்துக்களைப் பொருத்து அவர் எவ்வித ஏற்பாடும் செய்து வைக்காமல் அவரது மனைவி குழந்தையம்மாள், மகன்கள் நடராஜன், மனுதாரரின் தகப்பனார் கந்தசாமி ஆகியோர்களை அவரது சொத்துகளுக்கு வாரிசுகளாக விட்டுவிட்டு காலமாகிவிட்டார். அதன்பின்னிட்டு, மேற்படி கைலாசப்பகவுண்டரின் மகனும், மனுதாரரின் தகப்பனாருமான கந்தசாமி அவர்கள் கடந்த 05.02.1998 அன்று தேதியில் காலமாகிவிட்டார். கந்தசாமி காலமானதற்கு பின்னிட்டு அவரது வாரிசுகளான மனுதாரரும், அவரது தாயார் அன்னாம்மாள், கைலாசப்பகவுண்டரின் மனைவி குழந்தையம்மாள், மகன் நடராஜன் ஆகியோர்கள் சேர்ந்து கடந்த 17.04.2008–ம் தேதி ஒரு பாகசாசனப் பத்திரத்தை ஏற்படுத்திக் கொண்டார்கள். மேற்படி பாகசாசனப்படி பிரிந்த சொத்துக்களில் மனுதாரருக்கும், அவரது தாயாருக்கும் 'சி' செட்யூல் சொத்துக்கள் கூட்டாக பாத்தியப்பட்டு அவரவர்களுக்கு ஒதுக்கப்பட்ட பாகத்தை அவரவர்கள் தனி சுவாதீனம் பெற்று அனுபவித்து வருகிறார்கள். அதன்பின்னிட்டு மனுதாரரின் தாயார் அன்னம்மாள் கடந்த 14.08.2019–ம் தேதி காலமாகிவிட்டார். மேற்படி அன்னம்மாள் காலமானதன் பின்னிட்டு மேற்கண்ட வகையில் மனுதாரருக்கு பாத்தியப்பட்ட 'சி' செட்யூல் சொத்துக்கள் முழுவதையும் மனுதாரர் அடைந்து அவருடைய தனிப்பட்ட சுவாதீனத்தில் வைத்து அனுபவித்து வருகிறார். மேற்குறிப்பிட்ட 'சி' செட்யூல் சொத்துக்களின் ஒரு பகுதியே மனுச் சொத்தாகும். எதிர்மனுதாரர் மனுச்சொத்திற்கு அருகில் கிழபுறத்து பூமிக்காரர் ஆவார். எதிர்மனுதாரர் அவருக்கு சம்பந்தமில்லாத, மனுதாரருக்கு பாத்தியப்பட்ட மனுச்சொத்தில் மனுதாரர் தென்னை மரக்கன்றுகள் நடுவதற்கு இடைஞ்சல் செய்யும் கெட்ட நோக்கத்தோடு அத்துமீறி நுழைந்து மனுச் சொத்தான க.ச.107/1ஏ சொத்தில் 0.98 செண்ட் பூமி எதிர்மனுதாரருடையது என்று சட்டவிரோதமாக உரிமை கொண்டாடி வருகிறார். மேலும் பொது பாத்தியதையான க.ச.எண்.108/1பி, 113/1 நெ. காலையிலுள்ள

துருஸ்து கிணறு மற்றும் அதனைச் சார்ந்த வாரி வாய்க்கால், துளைச்சாமான் ஆகியவைகளில் உள்ள பொதுவில் 1/8 பங்கு பாத்தியதையையும் மற்றும் உள்ள தட பாத்தியதைகளையும் அழிமாட்டம் செய்யப்போவதாகவும் பசாரித்து வருகிறார். கடந்த 10.07.2021 அன்று தேதியில் மனுச்சொத்தினுள் எதிர்மனுதாரர் அத்துமீறி நுழைந்து மனுதாரரின் தென்னங்கன்றுகள் நட்டியிருப்பதை அழித்து அழிமாட்டமும் செய்துவிட்டார். அதனை மனுதாரர் மிகுந்த சிரமத்துடன் சமாளித்து விட்டார். மேற்படி எதிர்மனுதாரரின் சட்டவிரோதமான செயல்களை இந்நீதிமன்றத்தின் ஆணையின் மூலம் மட்டுமே எதிர்காலத்தில் தடுத்து நிறுத்திட இயலும். எனவே, எதிர்மனுதாரர் மனுச்சொத்தில் அத்துமீறி நுழைந்து இடையூறு செய்யக்கூடாது என இடைக்கால உறுத்துக்கட்டளை பரிகாரமும், இம்மனு மீதான விசாரணை நிறைவுபெறும் நாள்வரை எதிர்மனுதாரருக்கு எதிராக ஒரு தற்காலிக உறுத்துக்கட்டளை பரிகாரம் வழங்கிட வேண்டியும் தாக்கல் செய்துள்ளார்.

3) <u>எதிர்மனுதாரரின் எதிருரை சங்கதியின் சுருக்கம்</u> :

மனுதாரரின் மனு பொய்யும், மோசடியானதும், சட்டப்படியும் நியாயப்படியும் செல்லத்தக்கதல்ல என்றும், எதிர்மனுதாரர் வெளிப்படையாக ஒப்புக்கொள்ளும் சங்கதிகளைத் தவிர மனுவில் கண்டுள்ள மற்ற சங்கதிகளை மனுதாரரே நிரூபிக்க வேண்டும் என்றும் குறிப்பிடப்பட்டுள்ளது. மனுதாரருக்கு தாவா சொத்தில் எந்த உரிமையும் இல்லை. தாவா சொத்திற்கு எதிர்மனுதாரர் முழு உரிமையாளர் ஆவார். தாவா சொத்துக்களும், இதர சொத்துக்களும் மனுதாரரின் தாத்தாவான கைலாசப்பகவுண்டருக்கு பாத்தியப்பட்டது என்பது தவறாகும். அதற்கு கைலாசப்பகவுண்டர் பெயரில் உள்ள எந்தவொரு ஆவணமும் தாக்கல் செய்யப்படவில்லை. மனுதாரரின் தகப்பனார் இறந்த பிறகு மனுதாரரும், இதர வாரிசுகளும் பாகபிரிவினை செய்து கொண்டார்கள் என்பது இந்த எதிர்மனுதாரருக்கு தெரியாது. அதில் இந்த எதிர்மனுதாரர் தரப்பினர் அல்ல.

மேற்படி பாகப்பரிவினை பத்திரத்தில் எந்தவொரு சட்ட உரிமையும் இல்லாமல் தாவா சொத்துக்களானது சேர்க்கப்பட்டுள்ளது. எனவே, மேற்படி பாகப்பத்திரமானது இந்த எதிர்மனுதாரரை கட்டுப்படுத்தாது. மேற்படி பாகப்பத்திரத்தின்படி மனுதாரரும், அவரது தாயாரும் தாவா சொத்துக்களை அடைந்து அனுபவித்து வந்தனர் என்பது தவறாகும். தாவா சொத்தில் மனுதாரர் தென்னை மரங்களை பயிரிட்டு இருந்தார் என்பது தவறாகும். எதிர்மனுதாரரே தாவா சொத்தில் அனுபவத்திலும், சுவாதீனத்திலும் உள்ளார். தாவா சொத்தில் மனுதாரர் தென்னை பயிரிடும் போது அதனை எதிர்மனுதாரர் இடையூறு செய்தார் என்று கூறியுள்ளது தவறாகும். மனுதாரர் அவரது மனுவில் முன்னுக்குபின் முரணாக தகவல்களை குறிப்பிட்டுள்ளார். மேலும், வசதியுரிமையினை எதிர்மனுதாரர் இடையூறு செய்கிறார் என்பதும் தவறாகும். மேலும், எதிர்மனுதாரர் சட்டவிரோதமாக தாவா சொத்தில் நுழைந்து தாவா சொத்தினை சேதப்படுத்தினார் என்பதும் அர்த்தமற்றதாகும். மனுதாரரின் மனுவானது இந்த எதிர்மனுதாரரின் சொத்துக்களை ஆக்கிரமிப்பு செய்யவேண்டும் என்பதற்காக தாக்கல் செய்யப்பட்டுள்ளது. தாவா சொத்துக்களும், அருகிலுள்ள சுமார் 600 ஏக்கர் சொத்துக்களும் ஒரு கெட்டி செட்டியார் மற்றும் அவரது குடும்பத்தாருக்கு பாத்தியப்பட்டதாகும். 1958-ம் ஆண்டு ஏற்பட்ட பாகப்பிரிவினை பத்திரப்படி மேற்படி குடும்ப சொத்துக்கள் பாகம் பிரிக்கப்பட்டு சுமார் 100 ஏக்கர் சொத்துக்கள் ஒரு பரமசிவம் (எ) செல்வனுக்கு F ஷெட்யூலாக ஒதுக்கப்பட்டது. இதர சொத்துக்கள் இதர வாரிசுதாரர்களுக்கு ஒதுக்கப்பட்டது. பரமசிவம் (எ) செல்வன் கெட்டிசெட்டியாரின் பேரனாவார். தாவா சொத்துகளுக்கு மேற்படி பரமசிவம் என்பவரே முழு உரிமையாளராவார். அவரே தாவா சொத்தின் சுவாதீனத்திலும், அனுபவத்திலும் உள்ளார். தாவா சொத்தினை மேற்படி பரமசிவம் என்பவர் இந்த எதிர்மனுதாரரின் தகப்பனாருக்கு ஒரு பதிவு செய்யப்பட்ட கிரைய சாசனம் மூலம் 30.05.1973-ம் ஆண்டு பாத்தியப்படுத்தியுள்ளார். மேற்படி கிரையத்திற்கு பிறகு

இந்த எதிர்மனுதாரரின் தகப்பனாரே முழு உரிமையாளராக தாவா சொத்தின் அனுபவத்திலும், சுவாதீனத்திலும் உள்ளார். இந்த எதிர்மனுதாரரின் தகப்பனார் காலமான பிறகு அவரது ஒரே மகனான இந்த எதிர்மனுதாரர் தாவா சொத்தின் முழு உரிமையாளராக சுவாதீனத்திலும், அனுபவத்திலும் உள்ளார். மனுதாரரின் மற்றொரு சொத்திற்கு தொட்ட மேல்புறமாக 98 செண்ட் விஸ்தீரணமுள்ள பூமியே தாவா சொத்தாகும். கிழபுறம் இந்தஎதிர்மனுதாரரின் மற்றொரு சொத்து அமைந்துள்ளது. சில தினங்களுக்கு முன்பு மனுதாரர் அனைத்து சொத்துக்களிலும் தென்னை பயிரிட்டார். கடந்த 2 மாத காலமாக மனுதாரர் எதிர்மனுதாரரின் தாவா சொத்தில் இடையூறு செய்ய முயன்று வருகிறார். அதனை எதிர்மனுதாரர் காவல்துறை மூலம் தடுத்துவருகிறார். கடந்த 10.07.2021 தேதியில் மனுதாரர் எதிர்மனுதாரரின் சொத்துக்களை ஆக்கிரமிப்பு செய்யவேண்டும் என்கிற நோக்கதோடு தற்காலிகமாக தண்ணீர் பைப்லைன் அமைத்து நீர்பாய்ச்சி வருகிறார். உண்மையில், பைப்லைன் அமைக்க வேண்டுமானால் அது நிலத்தடியில் தான் அமைக்கப்படவேண்டும். ஆனால், வழக்கு தாக்கல் செய்வதற்காகவும், நீதிமன்ற ஆணையர் நியமிக்கப்பட வேண்டும் என்பதற்காகவும், 10.07.2021 தேதியில் மனுதாரர் அவ்வாறு நிலத்தின் மேல்புறத்தில் பைப்லைன் அமைத்துள்ளார். நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரம் கோரும் வழக்கில் சுவாதீனத்தில் யார் உள்ளார் என்பதை காட்டுவதற்கு, நீதிமன்ற ஆணையர் நியமனம் கோர இயலாது. மேலும், மனுசொத்து விபர பகுதியில் நான்குஎல்லை விபரம் குறிப்பிடப்படவில்லை. தாவா சொத்தினை 1973–ம் ஆண்டு இந்த எதிர்மனுதாரரின் தகப்பனார் கிரையம் பெற்ற நாள்முதல் இந்த எதிர்மனுதாரின் குடும்பம் மட்டுமே அனுபவத்திலும், சுவாதீனத்திலும் உள்ளது. மேலும், மனுதாரர் தாவா சொத்திற்கு அவரது பெயருக்கு பட்டா பெற்ற விபரம் நீதிமன்றத்தலிருந்து அறிவிப்பு வந்தபிறகு தான் எதிர்மனுதாரருக்கு தெரியவந்துள்ளது. எனவே, வருவாய்துறை அலுவலகத்தில் பட்டாவை

பொறுத்து எதிர்மனுதாரர் உரிய நடவடிக்கை எடுக்கஉள்ளார். இந்த எதிர்மனுதாரரின் தகப்பனார் பெயரில் உள்ள தாவா சொத்துக்களுக்கு வருவாய்துறை தவறாக மனுதாரர் பெயருக்கு சிட்டா வழங்கியுள்ளது. மேற்படி பட்டாவானது தாவா சொத்தில் எந்தவொரு உரிமையையோ அல்லது பாத்தியத்தையோ ஏற்படுத்தாது. மேலும், 0.98 செண்ட் விஸ்தீரணமுள்ள நிலமானது ஒரு பரமசிவம் என்பவருக்கு பாத்தியப்பட்டு 30.05.1973–ல் ஏற்பட்ட 3 கிரைய ஆவணங்கள்படி 1) இந்த எதிர்மனுதாரரின் தகப்பனார் சென்னியப்பகவுண்டருக்கு 3–ல் 1 பங்கும், 2) இந்த எதிர்மனுதாரரின் பாட்டனாருக்கு 3–ல் 1 பங்கும், 3) ஒரு மயில்சாமிகவுண்டர் என்பவருக்கு 3–ல் 1 பங்கும் கிரையம்செய்து கொடுக்கப்பட்டது. எனவே, மேற்படி 0.98 ஏக்கர் நிலங்கள் இந்த எதிர்மனுதாரரின் குடும்பத்திற்கு பாத்தியப்பட்டது. மேற்படி மயில்சாமிகவுண்டர் என்பவர் மனுதாரரின் தகப்பனாரின் சகோதரர் ஆவார். மேற்படி மயில்சாமிகவுண்டர் காலமானபிறகு அவரது மனைவியின் கோரிக்கையின்படி மயில்சாமிகவுண்டரின் பாகத்தையும், எதிர்மனுதாரரே அனுபவித்து வருகிறார். இந்த சங்கதிகள் அனைத்தையும் மறைத்து மனுதாரர் தாக்கல் செய்துள்ள மனுவானது தள்ளுபடி செய்யப்படவேண்டும்.

**4)** இரு தரப்பும் கேட்கப்பட்டது. ஆவணங்கள் பரிசீலிக்கப்பட்டன.

**5)** இம்மனுவில் தீர்மானிக்கப்பட வேண்டிய பிரச்சினை என்னவெனில் இம்மனு அனுமதிக்கத்தக்கதா? இல்லையா? என்பதே.

**6) பிரச்சினை** :

இரு தரப்பிலும் எடுத்துரைக்கப்பட்ட சங்கதிகள் மற்றும் தாக்கல் செய்யப்பட்டுள்ள ஆவணங்களை இந்நீதிமன்றம் தீர பரிசீலனை செய்ததில், மனுதாரர் தரப்பில் **ம.சா.ஆ.1** முதல் **ம.சா.ஆ.16** வரையான ஆவணங்கள் குறியீடு செய்யப்பட்டுள்ளன. எதிர்மனுதாரர் தரப்பில் **எ.ம.சா.ஆ.1** முதல்

**எ.ம.சா.ஆ.5** வரையான ஆவணங்கள் குறியீடு செய்யப்பட்டுள்ளன. நீதிமன்ற சான்றாவணங்கள் **நீ.ம.சா.ஆ.1 மற்றும் நீ.ம.சா.ஆ.2** குறியீடு செய்யப்பட்டுள்ளன.

மனுதாரர் தரப்பில் **ம.சா.ஆ.1** ஆக 17.04.2008 தேதியிட்ட மனுதாரர், மனுதாரரின் தாயார், கைலாசப்பகவுண்டரின் மனைவி குழந்தையம்மாள் மற்றும் அவரது மகன் நடராஜன் ஆகியோர் ஏற்படுத்திக் கொண்ட பாகப்பத்திரம் சான்றிட்ட நகலாகவும், **ம.சா.ஆ.2** ஆக 03.10.2001 தேதியிட்ட கந்தாய வரி ரசீது அசலாகவும், **ம.சா.ஆ.3** 10.02.2003 தேதியிட்டு கந்தாய வரி ரசீது அசலாகவும், **ம.சா.ஆ.4** ஆக 04.03.2005 தேதியிட்டு கந்தாய வரி ரசீது அசலாகவும், **ம.சா.ஆ.5** ஆக 23.12.2020 தேதியிட்ட கந்தாய வரி ரசீது அசலாகவும், **ம.சா.ஆ.6** ஆக 05.02.2005 தேதியிட்டு கைலாசப்பகவுண்டர் பெயரிலுள்ள பட்டா அசலாகவும், **ம.சா.ஆ.7** ஆக 07.07.2021 தேதியிட்ட மனுதாரரின் பெயரில் உள்ள கணினி சிட்டாவாகவும், **ம.சா.ஆ.8** ஆக 13.02.1998 தேதியிட்ட கந்தசாமியின் இறப்பு சான்றிதழ் ஒளிநகலாகவும், **ம.சா.ஆ.9** ஆக 02.05.2005 தேதியிட்ட கந்தசாமி வாரிசு சான்றிதழ் ஒளிநகலாகவும், **ம.சா.ஆ.10** ஆக 14.08.2019 தேதியிட்டு அன்னம்மாள் இறந்ததற்கான இறப்புச்சான்றிதழ் ஒளிநகலாகவும், **ம.சா.ஆ.11** ஆக மனுதாரரின் பெயரிலுள்ள ஆதார் அட்டை ஒளிநகலாகவும், **ம.சா.ஆ.12** ஆக 17.04.2008 தேதியிட்ட மனுதாரர், மனுதாரரின் தாயார், கைலாசப்பகவுண்டரின் மனைவி குழந்தையம்மாள் மற்றும் அவரது மகன் நடராஜன் ஆகியோர் ஏற்படுத்திக் கொண்ட பாகப்பத்திரம் சான்றிட்ட அசலாகவும், **ம.சா.ஆ.13** ஆக கைலாசப்பகவுண்டர் பெயரில் உள்ள நிலஉரிமை பதிவேடு அசலாகவும், **ம.சா.ஆ.14** ஆக 18.08.2021 தேதியிட்டு கிணத்துக்கடவு வட்டாட்சியர் புல எண்.17/1A வழங்கிய வரைபடம் ஒளிநகலாகவும், **ம.சா.ஆ.15** ஆக 18.08.2021 தேதியிட்டு கிணத்துக்கடவு வட்டாட்சியர் புல எண்.17/1B, 1C வழங்கிய வரைபடம் ஒளிநகலாகவும்,

**ம.சா.ஆ.16** ஆக 18.08.2021 தேதியிட்டு கிணத்துக்கடவு வட்டாட்சியர் புல எண்.113/2 வழங்கிய வரைபடம் ஒளிநகலாகவும், குறியீடு செய்யப்பட்டுள்ளது.

எதிர்மனுதாரர் தரப்பில் **எ.ம.சா.ஆ.1** ஆக 17.01.1958 தேதியிட்ட பாகசாசனப் பத்திரத்தின் சான்றிட்ட நகலாகவும், **எ.ம.சா.ஆ.2** ஆக 30.05.1973 தேதியிட்டு சென்னியப்பகவுண்டர் பெயருக்கு வழங்கப்பட்ட கிரையப் பத்திரம் சான்றிட்ட நகலாகவும், **எ.ம.சா.ஆ.3** ஆக 30.05.1973 தேதியிட்டு சிவன்மலைகவுண்டர் பெயருக்கு வழங்கப்பட்ட கிரையப் பத்திரம் சான்றிட்ட நகலாகவும், **எ.ம.சா.ஆ.4** ஆக 30.05.1973 தேதியிட்டு மயில்சாமிகவுண்டர் பெயருக்கு வழங்கப்பட்ட கிரையப் பத்திரம் சான்றிட்ட நகலாகவும், **எ.ம.சா.ஆ.5** ஆக 26.07.2021 தேதியிட்டு கிணத்துக்கடவு காவல் நிலையத்தில் எதிர்மனுதாரர் மனுதாரர் மீது அளித்த புகாரின் ஒளிநகலாகவும் குறியீடு செய்யப்பட்டுள்ளது.

நீதிமன்ற ஆணையரின் அறிக்கை மற்றும் வரைபடம் **நீ.மா.சா.ஆ.1** மற்றும் **நீ.மா.சா.ஆ.2** ஆகவும் குறியீடு செய்யப்பட்டுள்ளது.

**7)** ஆக, இருதரப்பிலும் தாக்கல் செய்யப்பட்டுள்ள மனு, எதிருரை மற்றும் ஆவணங்களை பரிசீலனை செய்ததில், மனுவானது மனுதாரர் தரப்பில் மனுச்சொத்து மனுதாரரின் தந்தையின் தந்தையாருக்கு பாத்தியப்பட்டு அவர் அனுபவித்து வந்தார் என்றும், அதன் பின்னிட்டு கடந்த 17.04.2008–ம் தேதி ஏற்பட்ட பாகசாசனப் பத்திரப்படி மனுதாரரின் குடும்பத்தாருக்கு சி ஷெட்யூல் ஒதுக்கப்பட்டது என்றும், மனுதாரரின் தாயார் காலமான பிறகு மேற்படி சொத்தக்களை மனுதாரர் அடைந்து அவருடைய தனிப்பட்ட சுவாதீனத்தில் வைத்து அனுபவித்து வருகிறார் என்றும், மேற்குறிப்பிட்ட 'சி' செட்யூல் சொத்துக்களின் ஒரு பகுதியே மனுச் சொத்தாகும் என்றும், கடந்த 10.07.2021 அன்று தேதியில் மனுச்சொத்தினுள் எதிர்மனுதாரர் அத்துமீறி நுழைந்து இடையூறு செய்ததை மனுதாரர் மிகுந்த சிரமத்துடன் சமாளித்து விட்டார்

என்றும், மேற்படி எதிர்மனுதாரரின் சட்டவிரோதமான செயல்களை இந்நீதிமன்றத்தின் ஆணையின் மூலம் மட்டுமே எதிர்காலத்தில் தடுத்து நிறுத்திட இயலும் என்றும், எனவே, எதிர்மனுதாரருக்கு எதிராக ஒரு இடைக்கால உறுத்துக்கட்டளை பரிகாரமும், இம்மனு மீதான விசாரணை நிறைவுபெறும் நாள்வரை எதிர்மனுதாரருக்கு எதிராக ஒரு தற்காலிக உறுத்துக்கட்டளை பரிகாரம் வழங்கிட வேண்டியும் இம்மனு தாக்கல் செய்யப்பட்டதாக தெரிவிக்கப்பட்டது. எதிர்மனுதாரர் தரப்பில், தாவா சொத்துக்களும் இதர சொத்துக்களும் ஆரம்பத்தில் ஒருகெட்டி செட்டியார் மற்றும் அவரது குடும்பத்திற்கு பாத்தியப்பட்டது என்றும், அதன்பிறகு ஏற்பட்ட பாகப்பிரிவினை மற்றும் கிரைய ஆவணங்கள் படி எதிர்மனுதாரரின் குடும்பத்தாருக்கு தாவா சொத்துக்கள் பாத்தியப்பட்டது என்றும், தற்போது எதிர்மனுதாரரே தாவா சொத்தின் அனுபவத்திலும், சுவாதீனத்திலும் உள்ளார் என்றும் தெரிவிக்கப்பட்டது.

மனுதாரர் தரப்பில் தாக்கல் செய்யப்பட்டுள்ள வா.சா.ஆ.1 ஆவணமானது 17.04.2008–ம் ஆண்டு ஏற்படுத்திய பாகபத்திரமாக காணப்படுகிறது. மேற்படி பாகப்பத்திரத்தில் பாகப்பத்திர சொத்துக்களானது, பிதுராஜ்ஜித வகையில் பாத்தியப்பட்ட சொத்துக்கள் என்று குறிப்பிடப்பட்டது. பிதுராஜ்ஜித வகையில் தாவா சொத்துக்கள் முதலில் யாருக்கு பாத்தியப்பட்டது என்பது குறித்தோ அல்லது தாவா சொத்துக்கள் குறித்த பாகப்பத்திரத்தை தவிர்த்து வேறு எந்த மூல ஆவணங்களோ மனுதாரர் தரப்பில் தாக்கல் செய்யப்படவில்லை. மேலும், தாவா சொத்துக்களானது முழுவதும் எதிர்மனுதாரரின் அனுபவத்திலும், சுவாதீனத்திலும் உள்ளது என்று எதிர்மனுதாரர் தரப்பில் தெரிவிக்கப்பட்டது. மேலும், மனுதாரருக்கு வழங்கப்பட்ட பட்டாவானது தவறாக வழங்கப்பட்டு விட்டதாகவும், அதைபொறுத்து நடவடிக்கை எடுக்க உள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டது. எதிர்மனுதாரர் தரப்பில் தாக்கல் செய்யப்பட்டுள்ள

பாகப்பத்திரம் மற்றும் கிரைய சாசனங்களை பரிசீலனை செய்யும் போது, தாவா சொத்துக்கள் குறித்து எதிர்மனுதாரர் தகப்பனார் சென்னியப்பகவுண்டர் மற்றும் அவரது தகப்பனார் சிவன்மலைகவுண்டர் மற்றும் எதிர்மனுதாரரின் தகப்பனாரின் சகோதரர் மயில்சாமிகவுண்டர் ஆகியோர் பெயருக்கு கிரைய சாசனம் ஏற்பட்டுள்ளது என்பதும் தெரியவருகிறது. எதிர்மனுதாரர் தாவா சொத்தில் இடையூறு செய்தார் என்பதற்கு எந்தவொரு ஆவணங்களும் மனுதாரர் தரப்பில் தாக்கல் செய்யப்படவில்லை. மேலும், இம்மனுவில் மனுதாரர் கோரும் பரிகாரமானது அசல் வழக்கில் இருதரப்பில் தாக்கல் செய்யபடும் ஆவணங்கள் மற்றும் சாட்சியங்களின் அடிப்படையிலேயே தீர்வு காண இயலும் என்று இந்நீதிமன்றம் கருதுகிறது. மேலும், இம்மனுவை அனுமதிக்க போதிய முகாந்திரம் இல்லை என்று கருதி இம்மனுவானது தள்ளுபடி செய்யப்படவேண்டும் என்று கருதி இப்பிரச்சனைக்கு தீர்வு காணப்படுகிறது.

8) முடிவில், இம்மனு அசல் வழக்கிற்கு குந்தகம் இன்றி தள்ளுபடி செய்யப்பட்டு உத்தரவிடப்படுகிறது. செலவுத் தொகை இல்லை.

இவ்வாணையுரை என்னால் சுருக்கெழுத்தருக்கு சொல்லப்பட்டு, அவரால் நேரடியாக கணினியில் தட்டச்சு செய்து பிழை நீக்கம் செய்ததை 2022 ம் ஆண்டு ஏப்ரல் திங்கள் 11 ம் நாளான இன்று என்னால் அவையறிய பகரப்பட்டது.

P SUBHASHINI
Digitally signed by P SUBHASHINI
Date: 2022.04.12 10:46:40 +0530

கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிபதி,
பொள்ளாச்சி.

**<u>மனுதாரர் தரப்பில் குறியீடு செய்யப்பட்டுள்ள சான்றாவணங்கள் :</u>**

| | | |
|---|---|---|
| ம.சா.ஆ.1 | 17.04.2008 | மனுதாரர், மனுதாரரின் தாயார், கைலாசப்பகவுண்டரின் மனைவி குழந்தையம்மாள் மற்றும் அவரது மகன் நடராஜன் ஆகியோர் ஏற்படுத்திக் கொண்ட பாகப்பத்திரம் சான்றிட்ட நகல் |
| ம.சா.ஆ.2 | 03.10.2001 | கந்தாய வரி ரசீது அசல் |
| ம.சா.ஆ.3 | 10.02.2003 | கந்தாய வரி ரசீது அசல் |
| ம.சா.ஆ.4 | 04.03.2005 | கந்தாய வரி ரசீது அசல் |
| ம.சா.ஆ.5 | 23.12.2020 | கந்தாய வரி ரசீது அசல் |
| ம.சா.ஆ.6 | 05.02.2005 | கைலாசப்பகவுண்டர் பெயரிலுள்ள பட்டா அசல் |
| ம.சா.ஆ.7 | 07.07.2021 | மனுதாரரின் பெயரில் உள்ள கணினி சிட்டா |
| ம.சா.ஆ.8 | 13.02.1998 | கந்தசாமியின் இறப்பு சான்றிதழ் ஒளிநகல் |
| ம.சா.ஆ.9 | 02.05.2005 | கந்தசாமி வாரிசு சான்றிதழ் ஒளிநகல் |
| ம.சா.ஆ.10 | 14.08.2019 | அன்னம்மாள் இறந்ததற்கான இறப்புச்சான்றிதழ் ஒளிநகல் |
| ம.சா.ஆ.11 | | மனுதாரரின் பெயரிலுள்ள ஆதார் அட்டை ஒளிநகல் |
| ம.சா.ஆ.12 | 17.04.2008 | மனுதாரர், மனுதாரரின் தாயார், கைலாசப்பகவுண்டரின் மனைவி குழந்தையம்மாள் மற்றும் அவரது மகன் நடராஜன் ஆகியோர் ஏற்படுத்திக் கொண்ட பாகப்பத்திரம் சான்றிட்ட அசல் |
| ம.சா.ஆ.13 | | கைலாசப்பகவுண்டர் பெயரில் உள்ள நிலஉரிமை பதிவேடு அசல் |
| ம.சா.ஆ.14 | 18.08.2021 | கிணத்துக்கடவு வட்டாட்சியர் புல எண்.17/1A வழங்கிய வரைபடம் ஒளிநகல் |
| ம.சா.ஆ.15 | 18.08.2021 | கிணத்துக்கடவு வட்டாட்சியர் புல எண்.17/1B, 1C வழங்கிய வரைபடம் ஒளிநகல் |
| ம.சா.ஆ.16 | 18.08.2021 | கிணத்துக்கடவு வட்டாட்சியர் புல எண்.113/2 வழங்கிய வரைபடம் ஒளிநகல் |

**<u>எதிர்மனுதாரர் தரப்பில் குறியீடு செய்யப்பட்டுள்ள சான்றாவணங்கள் :</u>**

| | | |
|---|---|---|
| எ.ம.சா.ஆ.1 | 17.01.1958 | பாகசாசனப் பத்திரத்தின் சான்றிட்ட நகல் |
| எ.ம.சா.ஆ.2 | 30.05.1973 | சென்னியப்பகவுண்டர் பெயருக்கு வழங்கப்பட்ட கிரையப் பத்திரம் சான்றிட்ட நகல் |
| எ.ம.சா.ஆ.3 | 30.05.1973 | சிவன்மலைக்கவுண்டர் பெயருக்கு வழங்கப்பட்ட கிரையப் பத்திரம் சான்றிட்ட நகல் |
| எ.ம.சா.ஆ.4 | 30.05.1973 | மயில்சாமிக்கவுண்டர் பெயருக்கு வழங்கப்பட்ட கிரையப் பத்திரம் சான்றிட்ட நகல் |
| எ.ம.சா.ஆ.5 | 26.07.2021 | கிணத்துக்கடவு காவல் நிலையத்தில் எதிர்மனுதாரர் மனுதாரர் மீது அளித்த புகாரின் ஒளிநகல் |

**<u>நீதிமன்ற சான்றாவணங்கள்:</u>**

| | | |
|---|---|---|
| நீ.மா.சா.ஆ.1 | | நீதிமன்ற ஆணையரின் அறிக்கை |
| நீ.மா.சா.ஆ.2 | | வரைபடம் |

**<u>மனுதாரர் மற்றும் எதிர்மனுதாரர் தரப்பில்</u>**

**<u>விசாரிக்கப்பட்ட சாட்சிகள் பட்டியல் :</u>**

– இல்லை –

P SUBHASHINI

Digitally signed by P SUBHASHINI
Date: 2022.04.12 10:46:53 +0530

கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிபதி,
பொள்ளாச்சி.